# தரம் - 10

## நாடகமும் அரங்கியலும் - I

## பகுதி - I

**கவனிக்குக:**

- ✧எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
- ✧1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1),(2),(3),(4) என எண்ணிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.
- ✧உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்குமுரிய வட்டங்களில் உமது விடையின் எண்ணை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (X) இடுக.
- ✧வினாப்பத்திரம் I இற்கு விடையளித்த பின்னர் அவ் விடைத்தாளை வினாப்பத்திரம் II இன் விடைத்தாள்களுடன் இணைத்து ஒப்படைக்குக.

---

01. குழந்தை ம.சண்முகலிங்கத்தினால் எழுதப்படாத நாடகம்
    1. நல்ல நண்பன்  2. ஆரொடு நோகேன்
    3. தாயுமாய் நாயுமானார்  4. யுகதர்மம்

02. ஆற்றுகைக் கலை அல்லாதது
    1. நடனம்  2. நாடகம்
    3. சிற்பம்  4. இசை

03. பொன்னர் சங்கர் ஆட்டம்
    1. மட்டக்களப்பிற்குரியது  2. வன்னிக்குரியது
    3. யாழ்ப்பாணத்திற்குரியது  4. மலையகத்திற்குரியது

04. பறைமேளக் கூத்து ஆடப்படுவது
    1. மட்டக்களப்பில்  2. திருகோணமலையில்
    3. யாழ்ப்பாணத்தில்  4. மலையகத்தில்

05. “ஆரொடு நோகேன்” எனும் நாடகம் முதன் முதலில் மேடையிடப்பட்ட ஆண்டு
    1. 1993  2. 1994  3. 1995  4. 1996

06. ஊமச் செயற்பாட்டின்போது பயன்படுத்தப்படாத அபிநயம்
    1. ஆங்கிகம்  2. வாச்சிகம்
    3. சாத்விகம்  4. ஆஹார்யம்

07. தொழில்நுட்பக் கலையாக கொள்ள முடியாதது
    1. மேடை நாடகம்  2. தொலைக்காட்சி நாடகம்  3. வானொலி நாடகம்  4. சினிமா

08. வேட உடை ஒப்பனையைக் குறிக்கும் அபிநயம்
    1. ஆங்கிகம்  2. ஆஹார்யம்  3. வாசிகம்  4. சாத்விகம்

09. நடிகன் தன்னுடைய உடலில் இருந்து குரல் எழுப்பக்கூடிய இடங்கள் எத்தனை
    1. மூன்று  2. நான்கு  3. ஐந்து  4. ஆறு

10. களத்து மேட்டினை அரங்காக் கொண்டு ஆடப்படுவது
    1. கோலம்  2. சொக்கரி
    3. நாடகம  4. நூர்த்தி

11. கதை தழுவிய ஆடலாக அமைவது
    1. இசை நாடகம்  2. நவீன நாடகம்
    3. வார்ப்பு நாடகம்  4. கூத்து

12. மலட்டு ராணிகள் இடம் பெறும் சிங்களக் கரணம்
    1. றட்டயக்கும  2. சன்னியக்கும  3. குறாயக்கும  4. கோலம்

13. சொர்ணாழி பயன்படுத்தப்படும் கூத்து
   1. வசந்தன் கூத்து 2. மகிடிக் கூத்து
   3. காமன் கூத்து 4. பறைமேளக் கூத்து

14. "தப்பி வந்த தாடி ஆடு" எனும் நாடகத்தின் ஆசிரியர்
   1. ஜெயசங்கர் 2. சி.மௌனகுரு
   3. குழந்தை.ம.சண்முகலிங்கம் 4. நா.சுந்தரலிங்கம்

15. கூத்தினைப் பழங்குபவர்
   1. கட்டியக்காரன் 2. சூத்திரதாரி
   3. அண்ணாவியார் 4. காரியகரவலரால

16. காமன் கூத்தில் பயன்படுத்தப்படும் வாத்தியம்
   1. தப்பு 2. தவில் 3. மகுடி 4. சல்லரி

17. உடல்வழிச் சித்திரிப்பாக அமையும் அபிநயம்
   1. ஆஹார்யம் 2. வாச்சிகம் 3. ஆங்கிகம் 4. சாத்விகம்

18. அரங்கு முழுவதற்கும் பாய்ச்சப்படும் ஒளி
   1. அடிப்பாத ஒளி 2. மங்கலாக்கி
   3. சுட்டொளி 4. பரப்பொளி

19. வேடமுக நாடகமாகக் கொள்ளப்படுவது
   1. கோலம் 2. சொக்கறி 3. நாடகம 4. நூர்த்தி

20. எதுவித முன்னாயத்தமுமின்றி செய்யப்படுவது
   1. புத்தாக்கம் 2. அரங்க விளையாட்டு
   3. ஊமம் 4. மோதுகை

21. நாடக எழுத்துருவினை தெரிவு செய்யும் பொறுப்பு வாய்ந்தவர்
   1. நெறியாளர் 2. தயாரிப்பாளர்
   3. நடிகர் 4. நாடகாசிரியர்

22. கூத்தினை பழக்குபவர்
   1. நெறியாளர் 2. தயாரிப்பாளர்
   3. கட்டியக்காரன் 4. அண்ணாவியார்

23. பண்பும் பயனும் நாடகம் ஒரு
   1. யதார்த்த நாடகம் 2. கூத்துருவ நாடகம்
   3. மோடிமை நாடகம் 4. சிறுவர் நாடகம்

24. ஒரு நடிகர் நடிக்கும்போது மற்றைய நடிகர்
   1. சத்தம் போடாது இருக்க வேண்டும்
   2. பொறுமையோடு இருக்க வேண்டும்
   3. குறுக்கே பேசக் கூடாது
   4. தேவையான பதிற்குறிகளைக் காட்ட வேண்டும்

25. நடிகர் வேடமுகத்தை அணிவதன் மூலம்
   1. தன்னை உருமாற்றுகிறார் 2. வகிபாகத்திற்கு அழுத்தம் கொடுக்கிறார்
   3. பாத்திரத்தைச் சுட்டுகிறார் 4. மேற் கூறிய யாவும் சரி

26. நாடகம் ஒன்றின் இறுதி ஒத்திகை
   1. வாசிப்பு ஒத்திகை 2. மனன ஒத்திகை
   3. வெள்ளுடுப்பாட்டம் 4. செயல் ஒத்திகை

27. பேச்சுப் பயிற்சியுடன் தொடர்புடைய பயிற்சி
   1. உடல் பயிற்சி 2. தளர்வுப் பயிற்சி
   3. மூச்சுப் பயிற்சி 4. யாவும் பிழை

28. மன்மதனை சிவன் எரித்த கதை இடம்பெறுவது
    1. வீரபத்திரர் ஆட்டத்தில்    2. அருச்சுனன் தபசில்
    3. பொன்னர் சங்கரில்    4. காமன் கூத்தில்

29. படச்சட்ட அரங்கின் பலம் அற்ற பகுதியாக அமைவது
    1. CC    2. DC    3. DL    4. UR

30. இருவர் ஜோடியாக நின்று விளையாடக்கூடிய அரங்க விளையாட்டு
    1. கண்ணாடி    2. ஊருக்குள் கரடி
    3. சின்னப்பானை பெரியபானை    4. கோழி கோட்டான்

31. வலது புறத்தில் உள்ள அரங்கு
    1. தெருவெளி அரங்கு
    2. களத்து மேடு
    3. மத்திய கால பூத் அரங்கு
    4. வட்டக்களரி அரங்கு



32. அருகில் உள்ள படத்தில் இருப்பவர்
    1. குழந்தை ம.சண்முகலிங்கம்
    2. V.V.வைரமுத்து
    3. காரை சுந்தரம்பிள்ளை
    4. பேராசிரியர்.சி.மௌனகுரு



33. படத்தில் இருப்பது
    1. களத்துமேடு
    2. வட்டக்கொட்டகை
    3. தெருக்கூத்து அரங்கு
    4. கரளிய



34. படத்திலுள்ள ஒளி விளக்கு
    1. பொட்டொளி
    2. கீற்றொளி
    3. பரப்பொளி
    4. பாத ஒளி



35. உலகில் முதலில் தோன்றிய நாடக வகை
    1. துன்பியல்    2. இன்பியல்    3. காஷ்யம்    4. அகடவிகடம்

36. ஈழத்து நவீன தமிழ் அரங்கின் பிதா என போற்றப்படுபவர்
    1. க.கணபதிப்பிள்ளை    2. க.சொர்ணலிங்கம்
    3. சி.மௌனகுரு    4. கா.சிவத்தம்பி

37. ஒரு நாடக வெற்றியில் அதிகம் தாக்கம் செலுத்துவோர்
    1. பார்ப்போர்    2. நாடகாசிரியர்
    3. தயாரிப்பாளர்    4. நெறியாளர்

38. ஆரொடு நோகேன் நாடகத்தில் வரும் குடும்பங்களின் எண்ணிக்கை
    1. ஒன்று    2. இரண்டு    3. மூன்று    4. நான்கு

39. நாடகம் ஒன்றிற்கு இரத்தமும் சதையும் கொடுப்பவர்
    1. நெறியாளர்    2. தயாரிப்பாளர்    3. நாடகாசிரியர்    4. நடிகர்

40. “நாடகத் தலைமுறை ஒன்றின் தாய்” என போற்றப்பட்டவர்
    1. சி.மௌனகுரு    2. ம.சண்முகலிங்கம்    3. ரவீந்திரநாத்தாகூர்    4. சு.வித்தியானந்தன்

## பகுதி - II

**முதலாம் வினாவையும் வேறு ஏதாவது நான்கு வினாக்களையும் தெரிவு செய்து மொத்தம் ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

**01. சுருக்கமான விடை எழுதுக.**

i. நுண்கலைகள் எத்தனை ?
ii. துணைக்கலைகள் இரண்டு தருக.
iii. மன்னார் பிரதேச நாடக வடிவங்கள் இரண்டு தருக.
iv. உணர்ச்சி வெளிப்பாட்டினைக் குறிக்கும் அபிநயம் எது?
v. வானொலி நாடகத்தின் அரங்கு எது?
vi. மாதவி ஆடிய ஆடல்கள் எத்தனை?
vii. உணர்ச்சியினை தொல்காப்பியர் எவ்வாறு குறிப்பிடுகிறார்.
viii. நாட்டிய சாஸ்த்திரம் குறிப்பிடும் சாத்விக அபிநயங்கள் எத்தனை?
ix. தமிழர்களின் பாரம்பரிய அரங்கு எது?
x. படச்சட்ட அரங்கின் தாயகம் எது?

(12 புள்ளிகள்)

02.

i. நாடகத்தை ஏன் கூட்டுக்கலை என்கிறோம். (02 புள்ளிகள்)
ii. நாடகத்தில் நடிகனின் பங்கினை மதிப்பிடுக. (10 புள்ளிகள்)

03.

i. ஆற்றுகைக் கலைகள் 4 தருக. (04 புள்ளிகள்)
ii. நாடகக் கலையின் பண்புகளைக் கூறுக. (08 புள்ளிகள்)

04.

i. அரங்க விளையாட்டுக்கள் என்றால் என்ன? (02புள்ளிகள்)
ii. அரங்க விளையாட்டுக்கள் இரண்டினைக் கூறி அவை விளையாடும் விதிமுறையினை எடுத்தக் கூறுக. (10புள்ளிகள்)

05.

i. கூத்து என்றால் என்ன? (04புள்ளிகள்)
ii. பறைமேளக் கூத்து பற்றி விளக்குக. (08புள்ளிகள்)

.

06.

i. ஆரொடு நோகேன் நாடகம் எவ் வகை நாடகமாகும்? (02புள்ளிகள்)
ii. இந் நாடகத்தின் கதைப் பொருளினை விளக்கிக் கூறுக. (10புள்ளிகள்)

07. நீர் பார்த்த மேடை நாடகம் ஒன்றினை விமர்சன ரீதியாகக் கூறுக. (12புள்ளிகள்)